| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>ஜோதி | OS.253/2019 | 27.07.2023 |

**PW1 – குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேனோ அதே பரிகாரத்தை தான் அ.வ.எண்.57/17 என்ற வழக்கிலும் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். மேல்முறையீட்டு வழக்கில் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். மேல்முறையீட்டு வழக்கானது விசாரணைக்கு தயாராக உள்ளது என்ற விபரமும் எனக்கு தெரியும். மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் உள்ள போது தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேல்முறையீட்டு வழக்கு சம்மந்தமான விபரங்களை இந்த வழக்கில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் போது இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் ஒருபோதும் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றும் பிரதிவாதிகள் தான் சுவாதீனத்தில் இருந்து வருவதாக சொன்னால் சரியல்ல. நாங்கள் தான் எங்கள் இடத்தில் முள்வேலி எல்லாம் போட்டு அடைத்து வைத்தோம். இவ்வழக்கின் பிரதிவாதிகள் தான் வழக்கு சொத்தில் மீன் கடை வைத்து நடத்தி வருவதோடு நிரந்தரமாக அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் பட்டா தற்போது வரை பிரதிவாதி ராஜேஸ்வரி பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் பட்டா வந்துவிட்டது. அ.வ.எண்.57/17 என்ற வழக்கின் தீர்ப்பிற்கு பின்னிட்டு தான் எனது பெயரில் பட்டா பெறப்பட்டது என்றால் முதலில் கூட்டுப்பட்டாவா இருந்து அதன் பிறகு எனது பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டது. தனிபட்டா

வழங்கவில்லை என்றும் வழக்கிற்காக வழங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் 22.02.2000 ல் எனது சம்மதத்துடன் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் நான் சம்மதிக்கவில்லை. ஆவணமும் ரத்து செய்யப்படவில்லை. அதனால் தான் வில்லங்க சான்றை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கிரைய ஆவணம் ரத்து செய்யப்பட்டுள்ளதால் பிரதிவாதிகள் தான் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருவதால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்ததக்கதல்ல என்றாலும், வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆவணமானது வழக்கு சொத்திற்கு தொடர்புடையது அல்ல என்றால் சரியல்ல. மேறப்டி ஆவணங்களை நான் வழக்கிற்காக தயாரித்தேன் என்றால் சரியல்ல. நானே பிரச்சனை செய்துவிட்டு பிரதிவாதிகள் மீது பொய்யான புகார் வா.சா.ஆ.6 கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் ரத்து செய்யப்பட்டது தொடர்பாக மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் போது நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது தவறானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பட்டாவையும் நான் மோசடியாகதான் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.